குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# இயேசு குருடனை சுகப்படுத்தினார்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest
Alastair Paterson

தழுவியவர்: Ruth Klassen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

குருடனான பர்திமேயு எரிகோவின் சாலையருகே உட்கார்ந்திருந்தான். பிச்சை எடுத்துக் கொண்டிருந்தான், சில இரக்ககுண மக்கள் கொஞ்ச காசையோ, அல்லது கொஞ்ச உணவையோ அந்த வழியாக கடந்து செல்லும் போது கொடுத்திருக்க வாய்ப்பிருக்கிறது.



பார்வையில்லாததினால் பர்திமேயுவினால் வேலை செய்ய முடியவில்லை.  அவனால் பிச்சையெடுக்க மாத்திரம்தான் முடிந்தது.



ஒரு நாள், அந்த நெடுஞ்சாலை மிகவும் சுறுசுறுப்பாயிருந்தது. அநேகர் கடந்து செல்லுகிற சத்தம் பர்திமேயுக்கு கேட்டது. ஏதோ விசித்திரமானதொன்று நடைபெறுகிறது. சீக்கிரமாகவே அந்த குருடனான மனிதன் கற்றுக்கொண்டான்.



நசரேயனாகிய இயேசு அந்த நகரத்திற்கு வந்திருந்தார். அவரை கேட்பதற்காக, ஜனங்கள் கூட்டமாய் கூடியிருந்தார்கள்.





"இயேசுவே, தாவீதின்
குமாரனே, என் மேல்
இரக்கமாயிரும்!"
என்று பர்திமேயு
அழுது கூப்பிட்டான்?
இயேசுவால் அவனுக்கு
உதவி செய்ய
முடியுமென எதற்கு
அவன் யோசித்தான்?



இயேசு மற்றவர்களை சுகமாக்கியிருக்கிறார் என்று அவன் கேள்விப்பட்டிருக்கலாம். சிலர் செவிடர்கள், சிலர் ஊமையர், சிலர் சப்பாணிகள், மற்றும் அவனைப்போல் சில குருடர்கள், "தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும்," பர்திமேயு மறுபடியும், மறுபடியும் கூப்பிட்டான். அவனுடைய சத்தம் நம்பிக்கையுடன் தொனித்தது.



பர்திமேயு
ஒன்றைக்குறித்து
நிச்சையமாயிருந்தான்,
இப்போது உதவியைப்
பெற்றுக்கொள்ளவில்லையான
ால், இன்னும் ஒரு தருணம்
கிடைக்காமற்போய்விடும்,
அந்த வழியாக இயேசு
இனி ஒரு போதும்
வராமற்போய்விடலாம்.



பர்திமேயு
எப்படியாகிலும்
இயேசுவிடம்
செல்லவேண்டும்.
ஆனால் ஜனங்கள்
நகரவில்லை.
"ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்!"
அவர்கள்
சொன்னார்கள்.
அவன்
அமைதியாக
இருக்க
எச்சரித்தார்கள்.



ஆனால் பர்திமேயு
அமைதியாக இருக்கவில்லை.
அவன் சத்தமிட்டுக்
கூப்பிட்டுக்
கொண்டேயிருந்தான்.
திடீரென இயேசு நின்றார்!
கவனித்துக்கேட்டார்!



அந்த குருடனை தன்னிடம் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்! "திடன் கொள்" ஜனங்கள் பர்திமேயுவிடம் சொன்னார்கள். "எழுந்திரு. அவர் உன்னை அழைக்கிறார்."

தன்னுடைய வஸ்திரங்களை எறிந்து விட்டு,
பர்திமேயு எழுந்து இயேசுவிடம் சென்றான்.



"நான் உனக்கு என்ன செய்ய வேண்டுமென?" கேட்டார் இயேசு. நீங்கள் என்ன பதிலளிப்பீர்கள்? நிறைய பணம் அல்லது அழகான வஸ்திரம் இவைகளை நீங்கள் கேட்டிருப்பீர்களா? இது தான் பர்திமேயுக்கு தேவைப்பட்டதா?



இல்லை, குருடனான பர்திமேயு இயேசுவிடம் பொன்னோ அல்லது அழகான வஸ்திரங்களையோ கேட்கவில்லை. அவனுக்கு என்ன தேவை என்பது உங்களுக்குத் தெரியும்.



"ஆண்டவரே, நான் பார்வையடையவேண்டும்." பர்திமேயு பார்க்க விரும்பினான். தேவனுடைய அழகான படைப்புகளான மரங்களையும், பறவைகளையும் பார்க்கவிரும்பினான்.



அவன் பார்க்க விரும்பியது எதற்கு என்றால் தான் பிச்சைக்காரனாயிராமல், தன்னைத்தானே கவனித்துக்கொள்ளவிரும்பினான்.



பின்பு இயேசு பர்திமேயுவைப் பார்த்து சொன்னார்: "உன் பார்வையை பெற்றுக்கொள். உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது."



உடனே அவன் பார்வை பெற்று, இயேசுவை பின்பற்றி சென்றான். அவனால் சொல்ல முடிந்தது என்ன வென்றால் "தேவன் அற்புதமானவர்!



அவர் என்னை சுகப்படுத்தினார்!" பர்திமேயுக்கு அது ஒரு ஆச்சரியமான வேளையாயிருந்தது.

எல்லோரும், அதைப் பார்த்தபோது, தேவனுக்கு துதி செலு த்தினார்கள்.  மறுபடியும் ஒரு முறை, தேவனின் குமாரனாகிய, இயேசுவின் அற்புதமான வல்லமையை, ஒரு எளிய பிச்சைக்கார குருடனுக்கு பார்வையை கொடுத்ததின் மூலம் கண்டுகொண்டார்கள்.



# இயேசு குருடனை சுகப்படுத்தினார்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

மாற்கு 10, லூக்கா 18,
யோவான் 9

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16